மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ரூ. 46.62 கோடி.

(ஆ) தேவைப்படும் திரவ நைட்டிரஜன், கால்நடை பராமரிப்புத் துறையின் ஈச்சங்கோட்டை அபிசேகப்பட்டி மற்றும் ஓசூர் பண்ணைகளில் தயாரிக்கப்படுகிறது. மேலும் அதிகப்படியாக தேவைப்படும் பொழுது தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் இணையம் மற்றும் தனியார் துறைகளின் மூலமும் பெறப்படுகிறது.

(இ) 1991—92-ம் ஆண்டில் 1,83,777 லிட்டர் திரவ நைட்ரஜன், ரூ. 17,03,673க்கு தனியார் நிறுவனங்கள் மூலம் பெற்று உபயோகப்படுத்தப்பட்டது.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்து மருத்துவ மனைகளிலும் உறை விந்து வைத்துக் கொள்ள வசதி ஏற்படுத்தித் தர முடியுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உறை விந்து வசதி ஏற்படுத்துவதற்காகத்தான் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் இது போன்ற மாபெரும் திட்டத்தினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 60. திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

60—

அனந்த கோபாலபுரத்தில் பின்தங்கிய வகுப்பினர் விடுதி.

*11962 திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (தெற்கு) ஊராட்சி அனந்தகோபாலபுரத்தில் பின்தங்கிய வகுப்பினர் விடுதி ஒன்றை அமைக்க 1992—93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1992 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாதரங்கோட்டைப் பகுதி என்பது பக்கத்திலே ஒரு 5 கிலோ மீட்டர் அளவுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட அம்பலகார இனத்தைச் சார்ந்த இன மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். அந்த பகுதியிலே இந்த பேக்வேர்ட் ஹாஸ்டல் என்பது மிகவும் அவசியமானது. 5, 6 கிலோ மீட்டர் அளவுக்கு போக்குவரத்து வசதியும் இல்லாமல் அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த பள்ளிக்கு வருகின்ற மாணவர்கள் அங்கே தங்குவதற்கு இந்த ஹாஸ்டல் மிக மிக அவசியமாக இருக்கின்ற காரணத்தினால் அதே நேரத்தில் சென்ற ஆண்டு நம்முடைய டாக்டர் புரட்சி தலைவர் அவர்கள் முன்னிலையிலே நான் பேராவூரணிக்கும் நடவைக்குறிச்சிக்கும் ஹாஸ்டல் வேண்டும் என்று கேட்டபோது உடனடியாக அமைச்சர் பெரு மக்கள் பேக்வேர்ட் கிளாஸ் மினிஸ்டர் அவர்களும் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும் நடவைக்குறிச்சிக்கு ஆதிதிராவிடர் ஹாஸ்டலும் பேராவூரணிக்கு பெண்கள் பேக்வார்ட் ஹாஸ்டலும் வழங்க உத்திரவிட்டிருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே வேளையில் இந்த அம்பலக்கார வகுப்பு மக்கள் வாழ்கின்ற இந்தப் பகுதியில் இந்த பேக்வேர்ட் ஹாஸ்டல் மிகமிக அவசியம் என்ற காரணத்தினால் மீண்டும் அதை பரிசீலிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பிறபட்டோர், மிகப் பிற்பட்டோர், சீர்மரபினர் மாணவர் மாணவியர்களுக்காக நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு 771 விடுதிகளை நடத்தி வருகிறது. தஞ்சை மாவட்டத்தை பொறுத்த வரையில் 35 விடுதிகள் இந்த மாணவியர் மாணவர்களுக்காக நடத்தப்பட்டு வருகிறது. இந்த மாமன்றத்திலே பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதிக்கு விடுதி ஒன்று வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தபோது, கேட்டதை எல்லாம் கொடுக்கும் ஆற்றல் குணம் கொண்ட வல்லமை கொண்ட நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் 1992-93 ஆம் நிதி ஆண்டிலே அவருடைய தொகுதிக்கு பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதி ஒன்றை அமைக்க உத்திரவிட்டுள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.